**மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்**

**<u>எம்.சி.ஓ.பி.நெ. 130 /2019</u>**

**2021ம் ஆண்டு <u>நவம்பர் திங்கள் 18ம் நாள் வியாழக் கிழமை</u>** மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.எம்.சாந்தா, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அமுதா | | வயது | : |
| த/ பெ.(அ)க/பெ. | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | சாதி | : |
| மாவட்டம் | : | | | |

**<u>முதல் விசாரணை</u>**

முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை மசாஆ. 1 ஆகும். என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் மசாஆ. 2. என் கணவரின் இறப்பு சான்றிதழ் நகல் மசாஆ. 3. வாரிசு சான்றிதழ் நகல் மசாஆ. 4. என் கணவரின் பணியாளர் அடையாள அட்டை அசல் மசாஆ. 5. என் கணவரின் சம்பள சான்றிதழ் ஆன்லைன் காப்பி மசாஆ. 6. 2ம் எதிர் மனுதார் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர் மனுதார் வாகன பதிவு சான்றிதழ் மசாஆ. 7. 1ம் எதிர்மனுதார் வாகன பாலிசி நகல் மசாஆ. 8. 1ம் எதிர் மனுதார் வாகன ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ. 9. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நேரடியாக தெரியாது. விபத்து நடந்த இடம் பேரிகார்டு இருக்கும் இடம் என்றும் இருசக்கர வாகனம் ஓட்டிய சரவணன் மோட்டர் சைக்கிளை ஓட்டத்தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்பட்டுத்தி விட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதார் வாகனம் விபத்து சமயத்தில் மெதுவாக சென்றது என்றால்

சரியல்ல. விபத்து சமயத்தில் விபத்தில் ஈடுபட்ட இருச்கரத்தின் உரியமையாளரையும் அதன் உரிமையாளரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 4 ம் மனுதார் என் கணவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றாலும் வேறு மகன்களுடன் தான் அவர் இருக்கிறார் என்றால் சரியல்ல. 4 ம் மனுதாரருக்கு பாச இழப்பு ஏற்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மே 2018 க்கான மொத்த சம்பளம் ரூபாய். 103263/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது . ஏப்ரல் 2018 க்கான மொத்த சம்பளம் ரூபாய். 54761/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மே மாத சம்பள பட்டியலில் டியூசன் பீஸ் என்று சொல்லி ரூபாய். 49500/- என்ற காண்பிக்கப்பட்டுள்ளது. மசாஆ. 6 ல் கண்ட 2 மாத சம்பள பட்டியலிலும் என் கணவரின் அடிப்படைய சம்பளமாக ரூபாய். 37000/- தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ.6 ஆவணத்தை வழங்கியவரை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெறுவதற்கு மசாஆ. 6 ஆவணத்தை வழங்கிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. என் கணவரின் இறந்ததற்க்காக இராணுவத்தில் இருந்து பணம் கொடுத்தார்கள் ஆனால் எவ்வளவு கொடுத்தார்கள் என்று ஞாபகமில்லை. மாதம் ரூபாய் . 18000/- பென்ஷனாக வாங்குகிறேன். என் கணவருக்கு வங்கி கணக்கு உள்ளது. அதை தாக்கல் செய்தால் உண்மையான மாதச்சம்பளம் தெரிந்து விடும் என்பதற்க்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1 ம் எதிர் மனுதாரர் காரணமில்லை என்றாலும் என் கணவர் அமர்ந்து சென்ற மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.